பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 09 2026 WEDNESDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) மின்சார வாகனங்களின் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) எரிசக்தி பாதுகாப்பில் உயிரி எரிபொருள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4) மதுரை மத்திய சிறைச்சாலை ஊழல் வழக்கில் நான்கு மாதங்களுக்குள் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5) உலகக்கோப்பை **Pickleball** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Bhushan Akut** தங்கப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

மின்சார வாகனங்களின் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த மாதம் மின்சார வாகனங்களின் விற்பனை **51** சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, நாளிதழில் வெளியான கட்டுரையையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

<<<<<>>>>>

எரிசக்தி பாதுகாப்பில் உயிரி எரிபொருள் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சர்வதேச சுற்றுச்சூழல் மாநாட்டில் பங்கேற்று பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சமயபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை பெறுவதற்கும் உறுதியான

நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொள்ளவில்லை என்று குறை கூறினார்.

மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை திறப்பதற்காக முதலமைச்சர் சென்றதற்கு ஐந்து கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேட்டூர் அணை காலதாமதாக திறக்கப்பட்டதன் காரணமாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் நல்லாட்சி அமைய வேண்டும் என்ற நோக்கில் தவெக அரசுக்கு காங்கிரஸ் ஆதரவு அளித்துள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

விருதுநகர் அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 100 நாட்களில் அறிவித்த பல்வேறுத் திட்டங்களை தவெக அரசு செயல்படுத்த தொடங்கியுள்ளதாக தெரிவித்தார்.

முறைகேடுகளுக்கு வகை செய்யும் திட்டங்கள் மட்டுமே ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீதான நடவடிக்கையை தவெக அரசு விரைவுபடுத்த வேண்டும் என்றும் திரு மாணிக்கம் தாகூர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மூட நினைப்பது ஏற்புடையது அல்ல என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சர்க்கரை ஆலையில் நான்கு பேர் மட்டுமே பணியில் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பழமையும், பெருமையும் வாய்ந்த இந்த சர்க்கரை ஆலை தொடர்ந்து இயங்குவதை தவெக அரசு உறுதி செய்யவேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

வேளாண் நிலத்தை வகை மாற்றம் செய்ய உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி கட்டாயம் என்பதை நீக்குவதற்கான சட்டத்திருத்த மசோதாவை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களுக்காக வேளாண் நிலங்களை பயன்படுத்துவது அதிகரித்து வருவது கவலையளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழலில் வேளாண் நிலத்தை வகை மாற்றம் செய்வதற்கான சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை மாநில அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>

மதுரை மத்திய சிறைச்சாலையில் நடைபெற்ற 100 கோடி ரூபாய் ஊழல் வழக்கை விரைந்து விசாரித்து நான்கு மாதங்களுக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு ஜோதி ராமன் அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

அந்த உத்தரவை நிறைவேற்றவில்லை என்றால் விசாரணையை வேறு அமைப்புக்கு மாற்ற நேரிடும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் வெயிலின் தாக்கம் அடுத்த ஐந்து தினங்களுக்கு அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 44 Sec. )***

<<<<<<>>>>>>

உலக தென்னை தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் பங்கேற்ற கண்காட்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Sound Byte - ராஜா — 39 Sec. )***

<<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தி வரும் 14-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், மதுரை மாவட்டம் விளாச்சேரியில் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அதிகபட்சமாக, **10** அடி உயர சிலை வரை இங்கு தயாரிக்கப்படுவதாக அப்பணியில் ஈடுபட்டுள்ள கைவினைக்கலைஞர் ராமலிங்கம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***<u>(Voice Byte — ரகுராஜா - 30 Sec. )</u>***

<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவள்ளூர் மாவட்டம் கொசவன்பாளையம் கிராமத்தில் வரும் **9-**ஆம் தேதி மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி கவிதா கூறியுள்ளார்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டம் அமூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நகர்புற பசுமையாக்கல் திட்டத்தின்கீழ், மலர் செடிகளை நடும் பணியினை ஆட்சியர் திருமதி பிரியா ரவிச்சந்திரன் தொடங்கிவைத்தார்.

------------------

திருவாரூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவுகளை சார்ந்த மாணவர்கள் மத்திய அரசின் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திரு மோகனசுந்தரம் கூறியுள்ளார்.

-----------------------

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி பேருந்து நிலையத்தில் பொன்னி சித்திரக்கடல் மாணவர்களின் ஓவியக் கண்காட்சி மற்றும் விற்பனை அரங்கை ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று திறந்துவைத்தார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டம் அழகிய மண்டபத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலை மேம்பாட்டுப் பணிகளை ஆட்சியர் திரு பிரதாப் இன்று ஆய்வு செய்தார்.

-------------------

திண்டுக்கல் ரயில் நிலையத்தில் ரயில் பயணிகளின் உடமைகளை பாதுகாப்பாக வைப்பதற்கு ஏதுவாக, உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், தயாரிக்கப்பட்ட அதிநவீன டிஜிட்டல் லக்கேஜ் லாக்கர் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

-------

நாமக்கல் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

------------------

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

------------------     சுரேகா

சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் சென்னை வருவாய் கோட்டாட்சியர் திரு ரவிச்சந்திரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை **Pickleball** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Bhushan Akut** தங்கப்பதக்கம் வென்றார்.

வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை **5** தங்கம், **12** வெள்ளி, **14** வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

------------------

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Chetan, Sagar Singh, Rohit** உட்பட **20** பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில் இப்போட்டி அக்டோபர் மாதம் **12**-ஆம் தேதி தொடங்கி, **14**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

-----------------

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில இந்தியாவின் **Rishabh Pant** தொடர்ந்து ஏழாவது இடத்தில் நீடிக்கிறார்.

---------------

மலேசியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Samarveer**, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-20, 21-13** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Kong Zhou Swin**-ஐ வென்றார்.

**Aarya Korgaonkar, Kirankumar Mekalaz, Nicholas Raj** ஆகியோர் ஒற்றையர் பிரிவுகளிலும், **Rameswaran — Satish** இணையும், **Sameerveer — Vaishnav** இணையும் இரட்டையர் பிரிவுகளிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.